# உரைநடைப்பகுதி - 3 மதிப்பெண் வினா - விடைகள்

## 1. கல்வியே அழியாச் செல்வம்

### புத்தக வினாக்கள்

**1. அழிவில்லாத செல்வத்தை பெறவேண்டும் என்பதே மனித இயற்கை என்பதனை மறைமலையடிகளார் யாங்ஙனம் விரித்துரைக்கிறார்?**

- ❖ சில நாள்களில் தோன்றி, இருந்து, மறைந்து போவதாகிய மக்களுடம்பிற் பிறந்தவர்களாகிய நாம்,
- ❖ உடம்பு அழிந்தாலும் தான் அழியாமல் தமது உயிரோடு எல்லா பிறப்புகளிலும் தொடர்ந்து வருவதாய் உள்ள அழிவில்லா பெருஞ்செல்வத்தையே அடைவதற்கு கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும்.
- ❖ அழியா செல்வத்தையே பெற வேண்டும் என்னும் விருப்பம் நம் ஒவ்வொருவரிடத்தும் காணப்படுகிறது.
- ❖ நாம் நாடோறும் கையாண்டு வரும் பொருள்களிலும் கூட விரைவில் அழிந்துபோகாமல் நீண்டநாள் நிலைத்திருக்கும் பொருள்களையே அடைய விரும்புகிறோம்.
- ❖ ஆதலால் நம்மில் ஒவ்வொருவருக்கும் அழியாச்செல்வத்தையே பெற வேண்டும் என்னும் அவா வேரூன்றி நிற்கிறது.

**2. நாம் நிலையானவை என்று மதிக்கும் செல்வங்கள் அழியத் தக்கவையே என்பதனை மறைமலையடிகளார் எங்ஙனம் காட்டியுள்ளார்?**

- ❖ நாம் நிலையானவை என்று நினைக்கும் மாட மாளிகைகள், ஆடை அணிகலன்கள், தட்டுமுட்டுகள் முதலானவைகள் நிலையானவை அல்ல.
- ❖ சில ஆண்டுகளுக்கு முன் ஐதராபாத்திலும், வாணியம்பாடியிலும் நேர்ந்த பெரியதொரு வெள்ளப்பெருக்கினால் எத்தனை வீடுகள் எத்தனை மாளிகைகள் நிலமட்டமாக துடைக்கப்பட்டு இருந்த இடமும் தெரியாமல் அழிந்து போயின.
- ❖ அப்போது அங்கு பெருஞ்செல்வர்களாயிருந்தவர்கள் எல்லாம் தம்மால் அருவருத்து ஒதுக்கப்பட்ட ஏழைக்குடிமக்களைக் காட்டிலும் இழிந்த நிலையை அடைந்தனர்.
- ❖ அவர்கள் உண்ணச் சோறும் உடுக்கத்துணியும் இன்றித் தத்தளித்தனர்.
- ❖ எட்டாம் நூற்றாண்டில் மெசினாப்பட்டினமானது நில அதிர்ச்சியினால் அழிந்து, நீருக்கும் நெருப்புக்கும் இரையான வரலாறை நினைக்கும் போது நாம் நிலையானவை என நினைத்திருக்கும் செல்வங்களும் செல்வங்கள் இல்லை என்பதை அறியலாம் என மறைமலையடிகள் குறிப்பிடுகிறார்.

**3. கல்வியே அழியாச்செல்வம் என்பதை மறைமலையடிகளார் எவ்வாறு காட்டியுள்ளார்?**

- ❖ கல்வி, வெள்ளம் வந்தாலும் அழியாது.
- ❖ தீயினாலும் வேகாது.
- ❖ மன்னராலும் பொருள் கொடுத்து வாங்க முடியாது.
- ❖ மற்றவர்க்கு கொடுக்க கொடுக்க குறையாது.
- ❖ திருடர்களாலும் கைப்பற்ற இயலாது. காவலும் தேவை இல்லாதது.
- ❖ இத்தகைய சிறப்பான கல்வியைத் தேடாமல் அழிந்து போகின்ற பொருள்களை தேடி மக்கள் அலைகின்றனர் என மறைமலையடிகள் கூறுகிறார்.

**4. மக்கள், விலங்குகளினும் உயர்வுடையவர்கள் ஏன்?**

- ❖ பொதுவாக உயிர்கள் என்ற வகையில் மக்களும், விலங்குகளும் ஒப்பானவர்கள்.
- ❖ உணவு தேடுதல், தேடிய உணவை உண்டல், உறங்கல், இன்புறுதல் ஆகிய தொழில்கள் மக்களுக்கும் விலங்குகளுக்கும் உண்டு.
- ❖ ஆனால், நன்று இது, தீது இது என்ற பகுத்துணரும் அறிவைப் பெற்றிருத்தல்,
- ❖ அறிவை வளர்க்கும் நூல்களைக் கற்றல் ஆகியவற்றால் மக்கள் விலங்குகளிலும் உயர்ந்தவராய் கருதப்படுகின்றனர்.
- ❖ அறிவின் செயல்கள் விலங்குகளிடம் இல்லை. கல்வியில்லாதவரிடத்தும் சிற்சில நேரங்களில் நுட்பமான அறிவு காணப்பட்டாலும் அதனை அறிவாகப் பெரியோர்கள் கருதுவது இல்லை.
- ❖ இதனையே திருவள்ளுவர்,

**“விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்”** எனக் கூறியுள்ளார்.

5. **பெண்பாலார்க்கும் கல்வி இன்றியமையாததே என்னும் கருத்தினை மறைமலையடிகளார் விளக்குவது யாங்ஙனம்?**
   - ❖ அறிவார்ந்த ஆன்றோர், மக்களாய்ப்பிறந்த எல்லோர்க்கும் கல்வி இன்றியமையாதது வேண்டற்பாலது என்று கூறியிருக்கிறார்கள்.
   - ❖ கல்வி ஆண்மக்களுக்கு வேண்டுமே அல்லாமல் பெண் மக்களுக்கு வேண்டுவதில்லை என்று உரைப்போர் உண்மை அறியாதவர்.
   - ❖ இவ்வுலக வாழ்வை நன்றாய் நடத்துவதற்கு ஆண்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும், நுண்ணறிவும் வேண்டியவர்களாய் உள்ளவர்கள் பெண்கள்.
   - ❖ முற்காலத்தில் இருந்த ஔவையார், பூதப்பாண்டியன் பெருந்தேவியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் போன்ற பெண்மணிகள் கல்வியில் மிகச் சிறந்தவராக இருந்திருக்கின்றனர்.
   - ❖ எனவே ஆண்மக்களைக் காட்டிலும் பெண் மக்கட்கு கல்வி இன்றியமையாத அழியாச்செல்வமாகும் என்பதை மறைமலையடிகள் விளக்குகிறார்.

6. **அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறை யாது?**
   - ❖ அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் முயலுதல் வேண்டும்.
   - ❖ உயர்ந்த நூல்களில் சொல்லப்பட்டுள்ள நல்லொழுக்கங்களை நாம் பழகி வருதல் வேண்டும்.
   - ❖ நாம் சிறிதும் பெருமை பாராட்டாமல் பணிவான சொல்லும் பணிவான செயலும் உடையவராய் இருத்தல் வேண்டும்.
   - ❖ எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் காட்டல் வேண்டும்.
   - ❖ நல்லொழுக்கத்தில் வழுவாதவராய் இருத்தல் வேண்டும்.
   - ❖ உலக வாழ்க்கையை இனிது நடத்தி நாமும் பயன்பெற்றுப் பிற உயிர்களையும் பயன்பெறச் செய்ய வேண்டும்.
   - ❖ இவையே நாம் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறை என்று மறைமலையடிகளார் கூறுகிறார்.

7. **ஐரோப்பாக்கண்டத்தில் நடந்த சண்டையினால் விழைந்த அழிவு குறித்து மறைமலையடிகள் கூறுவன யாவை?**
   - ❖ ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த சண்டையினால் எங்கே பார்த்தாலும் செந்நீர் களரியும், பிணக்காடும் பீரங்கி வெடியும் கூக்குரல் ஒலியுமாய் இருந்தன.
   - ❖ உயர்ந்த கட்டடங்கள் எல்லாம் பீரங்கி வெடிகளால் தகர்க்கப்பட்டுப் பாழாயின.
   - ❖ பல அரசர்கள், செல்வர்கள், போர்வீரர்கள் ஆகியோர் இச்சண்டையில் மாய்ந்து விட்டனர்.
   - ❖ முதல் நாள் ஆடை அணிகலன்கள் அணிந்து, அறுசுவை உணவு உண்டு, தம்மை மறந்து அகங்களித்தவர்கள் மறுநாள் அவற்றை முற்றும் இழந்தவராயினர்.
   - ❖ இச்சண்டையினால் நேர்ந்த அழிவுகளை அறிந்திருந்தும் நாம் இவ்வெளி ஆரவாரங்களை செல்வங்கள் என எண்ணக்கூடாது என மறைமலையடிகள் கூறுகிறார்.

## கூடுதல் வினா

1. **பருப்பொருள், நுண்பொருள் குறித்து எழுதுக.**

   **பருப்பொருள்:**
   - ❖ செல்வமானது வெளியேயுள்ள பருப்பொருள்
   - ❖ இது வெள்ளத்தால் அழியும்; வெந்தழலால் வேகும்.
   - ❖ பொன், நிலம், வீடு முதலியவை பருப்பொருட்களாகும்.
   - ❖ இதை பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும்.
   - ❖ இதை பாதுகாக்க அளவு கடந்த முயற்சி தேவை.

   **நுண்பொருள்:**
   - ❖ கல்வி என்பது உள்ளத்திலிருக்கும் நுண்பொருள்
   - ❖ இது வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது
   - ❖ இது அறிவுருவான நுண்பொருள்.
   - ❖ கல்வியைப் பிறருக்கு எடுத்து சொல்லச் சொல்ல அளவில்லாமல் பெருகும்.
   - ❖ கல்வியைப் பாதுகாக்க எத்தகைய முயற்சியும் தேவையில்லை.

## 2. வீரச்சுவை

### புத்தக வினாக்கள்

**1. பொருட்சுவை எத்தனை? அவற்றுள் நகை தோன்றும் சூழலை ஆசிரியர் எங்ஙனம் காட்டியுள்ளார்?**

- பொருட்சுவை ஒன்பது வகைப்படும்.
- 1. நகை 2. அவலம் 3. இழிப்பு 4. வியப்பு 5. அச்சம்
  6. வீரம் 7. வெகுளி 8. உவகை 9. சமனிலை
- **நகை தோன்றும் சூழல்:** பித்தன் ஒருவன் உடல் முழுவதும் சாம்பல் பூசிக் கிழிந்த துணிகளையும், சுள்ளிகளையும் தொடுத்து இடையில் உடுத்திக் கொள்கிறான். அலரிப்பூவும், எருக்கம்பூவும் கோத்து மார்பில் அணிந்து கொள்கிறான். அழுதலும், தொழுதலும், விழுதலும், எழுதலும் முதலியன செய்து வருதலைக் காணுமிடத்து நமக்கு நகை தோன்றும்.
- பித்தன் ஒருவன் கூறும் சொற்களைக் கேட்டாலும் நகை தோன்றும்.
- மேலும் பித்தனின் இயல்புகளை அமைத்து நல்லிசைப்புலவர் ஒருவர் பாடிய பாடல்களைக் கேட்டாலும் நகைச்சுவை நிகழும்.

**2. சுவை என்பதற்குரிய விளக்கம் யாது?**

- சுவை என்னும் தமிழ்ச்சொல்லும், ரஸம் என்னும் வட சொல்லும் ஒரே பொருள் உடையன.
- நாவினால் நுகரப்படும் சுவை ஆறு
- செவியால் நுகரப்படுவன குண அலங்காரங்களாகிய சொற்சுவைகளும் ஒன்பது வகையான பொருட்சுவைகளாகும்.
- நாவால் சுவைத்து உண்டவை அப்பொழுதே நீங்கிவிடும்.
- செவியால் சுவைத்து உண்டவை உள்ளத்தே எப்பொழுதும் நீங்காமல் நிலைபெற்று இன்பம் பயக்கும்.
- சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும்.
- மெய்ப்பாடாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி புறத்தார்க்குப் புலப்படுவது.
- நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்திலே மெய்ப்பாடு செய்யுளுறுப்புகளுள் ஒன்றாக குறிக்கப்படுகிறது.

**3. வீரம் என்னும் சுவை குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?**

- தொல்காப்பியர், வீரம் என்பதனைப் பெருமிதம் என்னும் சொல்லால் குறிக்கின்றார்.
- யாவரொடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின் பெருமிதம் என்னும் சொல்லால் வீரத்தைக் குறிக்கிறார்.
- கல்வி, தறுகண்மை, இசை, கொடை என்னும் நான்கும் பற்றிப் பெருமிதம் பிறக்கும் எனக் கூறுகிறார்.
- எனவே போர்ச்செயலில் காட்டும் ஆண்மை மட்டுமே அவர் வீரம் எனக்கொண்டிலர் என்பது புலப்படும்.
- இந்நான்கினுள்ளும் படைவீரமும், கொடைவீரமும் பழைய இலக்கியங்களில் பலவிடத்து ஒருங்கு கூறப்பட்டுள்ளன.

**4. நலங்கிள்ளியின் படைவீரத்தையும் கொடைவீரத்தையும் எவ்வாறு அறியலாம்?**

- **நலங்கிள்ளியின் படைவீரம்:** நலங்கிள்ளி சோழ மன்னருடன் போர் தொடங்கும் முன் தன் வஞ்சினத்தில், **"இந்நிலத்து ஆற்றலுடையோர் ஆற்றல் போற்றாது ……உயர்ந்தனன் பெயர்தலோ அரிதே"**எனக் கூறுகிறார்.
- **விளக்கம்:** என் ஆற்றலையும் துணிவையும் மதியாது இகழ்ந்த அறிவிலியானவன் தூங்கும் புலியை இடறிய குருடன் போலப் பிழைத்து மீளுதல் அரிது என்று கூறுவது நலங்கிள்ளியின் படைவீரத்தை நன்கு புலப்படுத்துகிறது.
- **நலங்கிள்ளியின் கொடைவீரம்:** நலங்கிள்ளி சோழ மன்னருடன் போர் தொடங்கும் முன் தன் வஞ்சினத்தில், **"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி……இன்னுயிராயினும் கொடுக்குவென்"** என்று கூறுகிறார்.
- **விளக்கம்:** பகைவராயின் என் அடியின் கீழ் ஒதுங்கி நின்று ஈயென இரப்பராயின் இந்த அரசாட்சியைக் கொடுப்பது பெரிதன்று. என் உயிரினும் வேண்டினும் கொடுப்பேன் என்பது நலங்கிள்ளியின் கொடைவீரம் ஆகும்.

**5. பாரியின் படைவீரத்தையும் கொடைவீரத்தையும் எவ்வாறு அறியலாம்?**

- ஒருகாலத்தில் தமிழ்நாட்டு மூவேந்தரும் பாரி என்னும் வள்ளலின் பறம்பு அரணை முற்றுகையிடத் தொடங்கினர். அப்பொழுது பாரியின் ஆருயிர் நண்பராகிய கபிலர் என்னும் புலவர் பெருமான் அங்கே போந்து அவ்வரசர்களிடம் பின்வருமாறு கூறுகிறார்.
- **பாரியின் படைவீரம்:** வேந்தர்காள்! நீவிர் மூவரும் நும் சேனையுடன் ஒருங்கு திரண்டு போர் செய்தாலும் பறம்பு மலை பற்றுதற்கரியது என்று கபிலர் கூறுவதன் மூலம் பாரியின் படைவீரம் புலப்படுகிறது.

- **பாரியின் கொடைவீரம்:** நீவிர் கூத்தரும் பாணருமாகி ஆடிப்பாடி வரின் எஞ்சியுள்ள பறம்பு மலை நுமக்கு பரிசிலாக வேண்டினும் மாறாது வழங்குபவன் பாரி வள்ளல் எனக்கூறுவதன் மூலம் பாரியின் படைவீரத்தை அறியலாம்.

**6. முதுகுடிப்பிறந்த மகளிருக்கும் வீரவுணர்ச்சி மிருந்திருந்தது என்பதை சான்றுடன் நிறுவுக.**

- **மூதின் முல்லை இலக்கணச் செய்யுள் கூறுவது:**
  - ஆடவரைப்போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதையே,
  - **"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்**
    **மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று"** என்று மூதின் முல்லை குறிக்கும்.
- **புறநானூறு குறிப்பிடுவது:**
  - கணவனும் தமையனும் களத்தில் இறக்க, மைந்தனை போர்க்கோலம் புனைவித்துப் போருக்கு அனுப்பிய தாயின் வீரமும்,
  - நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனி மகனும் போரிலிறக்க வருந்தாது, ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரமும் இப்பாடல்களிற் பொலிந்து தோன்றும்.
- **குறுந்தொகை பாடல் குறிப்பிடுவது:**
  - வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொலியும் மகளிர் மனைவியராய் வாய்ப்பதையே பெரும் பேறாகக் கருதினர் என்னும் கருத்து குறுந்தொகை பாடலில் கூறப்பட்டுள்ளது.

**7. பழந்தமிழரின் படைமாட்சி குறித்து ஆசிரியர் எழுதியிருப்பன யாவை?**

- தமிழருடைய படைமாட்சியைப் பற்றி கூறவந்த திருவள்ளுவர்,

  **"கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும்**
  **ஆற்ற லதுவே படை"** என்கிறார்.
- பகைவரை வெகுண்டு நோக்கிய கண் அவர் வேல் கொண்டு எறியுமிடத்து இமைத்துவிடுமாயினனும் வீரர்க்கு அதுவே தோல்வியாகுமாம்.
- தன்மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித்திரியும் வீரனொருவன் தன் மார்பிலே தைத்துக்கிடந்த வேலினைக் கண்டு மகிழ்கின்றானாம்! என்னே தமிழருடைய ஆண்மை!

**8. பண்டைத்தமிழரின் போர்நெறி யாது? அதனைக் கம்பர் தன் காப்பியத்தில் எங்ஙனம் காட்டியுள்ளார்?**

- பகைவர் மேற்செய்யும் வன்கண்மையைப் பேராண்மை என்று சொல்வர்.
- அப்பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயின் அது தீர்த்துக்கொள்ளும்பொருட்டுக் கண்ணோட்டமுடன் உதவி செய்தலை அவ்வாண்மைக்கு கூர்மை என்று கூறுவர்.
- பண்டைத்தமிழரின் போர்நெறியை திருவள்ளுவர்,

  **பேராண்மை என்ப தறுகண் உற்றக்கால்**
  **ஊராண்மை மற்றுஅதன் எ·.கு** என்ற குறள் வழியாக குறிப்பிடுகின்றார்.
- பண்டைத்தமிழரின் போர்நெறி போர்க்களத்தில் தனக்கு சமமான ஆயுதம் இல்லாத பகைவரை எதிர்த்து போர் செய்யாமையே ஆகும்.
- நடைபெற்ற எல்லா போர்களிலும் வெற்றியே புனைந்த அரக்கர் கோமானாகிய இராவணன் இராமனுடன் புரிந்த முதற்போரிலேயே தோல்வியுற்றான்.
- தேர் அழிந்து முடியொழிந்து வில்லும் அம்பும் இன்றி வெறுங்கையனாய் இருந்த இராவணனை நோக்கி போர் செய்வதற்கு இன்று போய் நாளை வருவாய் என்ற செய்தியைக் கம்பர் தன் காப்பியத்தில் காட்டியுள்ளார்.

## 3. காளத்திவேடனும் கங்கைவேடனும்

### புத்தக வினாக்கள்

**1. காளத்தி வேடனாகிய கண்ணப்பரின் பெருமைகளாக மணிவாசகர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.**

- தமிழ்நாட்டு காளத்தி மலையிலே தோன்றினான் காளத்தி வேடனாகிய கண்ணப்பன்.
- காளத்தி நாதனிடம் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த்தெடுத்த கண்ணப்பன் புகழ். தமிழ் நாடெங்கும் பரவி நிற்கின்றது.
- எல்லையற்ற அன்பிற்குக் கண்ணப்பனே சான்று ஆயினான்.
- திருவாசகத்தில் வண்டை நோக்கி பாடும் நோக்கில்,
- "கண்ணப்பரை போன்று இறைவனிடம் அன்பு கொள்ளும் தன்மை என்னிடத்தும் இல்லை. எனினும் இறைவன் என்னையும் ஆட்கொண்டு இருக்கிறான்" என்று மணிவாசகர் குறிப்பிடுகிறார்.

**2. கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை கூறுக.**

**கங்கை வேடன்:**

- ❖ ஆண்டவனாகிய இராமனைக் காணச்சென்ற கங்கைவேடனாகிய குகன், தனக்கினிய கங்கையாற்று மீனையும், கொம்புத்தேனையும் உடன் கொண்டு சென்றான்.
- ❖ குகன் அபச்சாரம் செய்து விட்டதாக எண்ணிய விருத்தமாதவரை இராமன் தெருட்டியருளினான்.

**காளத்தி வேடன்:**

- ❖ காளத்தி நாதன் தனக்கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் உரியதாகும் என எண்ணினான்.
- ❖ காளத்திநாதனிடம் வைத்த அன்பினால், தனக்கினிய இறைச்சியைக் கொண்டுவந்து கோயிலில் இட்டான்.

**3. கண்ணப்பனை போலவே குகனும் பிரிதலாற்றவன் என்பதை விளக்குக.**

- ❖ காளத்திநாதன்பால் அன்பு பூண்ட கண்ணப்பனைப்போலவே குகனும் இராமனைப் பிரிந்திருக்கலாற்றாத மனப்பான்மை பெற்றான்.
- ❖ இராமனை பிரிந்திருத்தல் பெருந்துன்பம் என்று குகன் எண்ணினான்.
- ❖ அந்தி மாலை வந்தடைந்தபோது, இராமன் குகனை நோக்கி, 'அப்பா! இன்றிரவு உன் ஊருக்குச் சென்று காலையில் கங்கையாற்றைக் கடப்பதற்குப் படகுகள் கொண்டு வருக! என்றான்.
- ❖ இதனால் குகனுடைய மனம் அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகுவதாயிற்று.
- ❖ குகன் இராமனை நோக்கி, ஐயனே! நான் போகலாற்றேன். ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன் என்று குகன் கூறினான்.

**4. பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யாவர்? இவர்தம் அருஞ்செயல்கள் யாவை?**

**பட்டினத்தடிகள் போற்றிய மூவர்:**

- ❖ 1. **சிறுத்தொண்டர்:** பெற்ற பிள்ளையை வாளாலரிந்து இறைவனுக்கு இன்னமுது ஊட்டியவர்.
- ❖ 2. **திருநீலகண்டர்:** மனையாள் வைத்த ஆணை கடவாது இளமையிலேயே ஐம்பொறிகளை வென்று இன்பம் துறந்தவர்.
- ❖ 3. **கண்ணப்பர்:** ஆறுநாள் பழகிய பான்மையினால், ஆறாத அன்பினால் தன் கண்ணைப் பறித்து இறைவன் கண்களில் அப்பியவர்.

**5. வானர வேந்தனாகிய சுக்கிரீவன் அகங்குழைந்து பாராட்டும் இருவர் யார்?**

- ❖ **சுக்கிரீவன் அகங்குழைந்து பாராட்டும் இருவர்:** 1. கழுகின் வேந்தன் - சடாயு 2. கங்கை வேடன் - குகன்
- ❖ காட்டில் வாழும் கழுகின் வேந்தனும் நாட்டில் வாழும் நல்வேடனும், காட்டிய அன்பை காட்ட இயலாதவனாயினேன்.
- ❖ இலங்கை மாநகரில் சிறையிருந்த சீதையை இங்கே கொண்டு வர வலிமையற்று வெறுமையாகக் கண்டு வந்தேன்!
- ❖ நல்லார்க்கு இடர் விளைவிக்கும் அரக்கனை எதிர்த்தும் அவன் சிரங்களைக் கொய்து கொணராது வெறுங்கையனாய் வந்தேனே! என்று வானர மன்னன் சுக்கிரீவன் வருந்தினான்.

**6. இராமனை வெல்லக் கருதிப் படை கொண்டு வந்ததாக கருதிய கங்கைவேடனின் வீரமொழிகள் யாவை?**

- ❖ குகன் பரதனது பரந்த படையைக் கண்டு இராமனை வெல்லக் கருதி படை கொண்டு வந்ததாக எண்ணினான்.
- ❖ தன் தோழனுக்காக உயிரையும் கொடுக்க இசைந்து நின்றான்.
- ❖ என் காவலில் அமைந்த கங்கை ஆற்றைக் கடந்து இவர் போவாரோ?
- ❖ தோழன் என்று நாயகன் உரைத்த சொல் ஒரு சொல்லன்றோ? நன்றி மறவாத நாய் போல தலைவனது ஆணைக்கடங்கி காவல் புரியும் ஏழையேன்.
- ❖ அமர்க்களத்தில் நான் இறந்த பின்னன்றோ பரதன் இராமனைப் பார்க்க வேண்டும் என்று குகன் கூறிய மொழிகளில் தலையாய அன்ப தழைத்திலங்க காணலாம்.

**7. கைம்மாறு கருதாத அன்பில் கங்கைவேடனும் காளத்தி வேடனும் தலை நின்றமை யாங்ஙனம்?**

- ❖ கங்கைவேடனும் காளத்தி வேடனும் கொண்ட அன்பிற்குச் சிறந்த ஒற்றுமையுண்டு.
- ❖ இருவரும் இறைவனிடம் பயன் கருதாது பக்தி பூண்டவர்கள்.
- ❖ கூடும் அன்பினில் கும்பிடுதல் தன் கடன் என்று கொண்டவர்கள்.
- ❖ இத்தகைய பக்தியே சாலச்சிறந்தது எனச் சான்றோர் கூறுவர்.
- ❖ கங்கைக் கரையில் குகன் இராமனைச் சேர்ந்தான். கிஷ்கிந்தையில் சுக்ரீவன் வந்து சேர்ந்தான்.
- ❖ இலங்கையில் விபிஷணன் வந்தடைந்தான்.
- ❖ சுக்ரீவன், விபிஷணன் இராமனிடம் அன்பு பூண்டதற்குக் கைம்மாறாக கிஷ்கிந்தை, இலங்கை அரசைப் பெற்றனர்.
- ❖ குகன் ஒருவனே பக்திக்காக பக்திசெய்து கைம்மாறு கருதாத அன்பின் நீர்மையை நன்கு விளக்கி காட்டினான்.

## 4. குடிமக்கள் காப்பியம்

### புத்தக வினாக்கள்

**1. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இளமையில் கேட்டதாகக் கூறும் முடிமக்கள் கதைகள் யாவை?**

- ❖ விக்கிரமாதித்தன் கதை, மதன காமராசன் கதை
- ❖ திருவிளையாடல்கள், நளன் கதை
- ❖ அரிச்சந்திரன் கதை, துரியோதனன் கதை
- ❖ இராமர் கதை எல்லாம் முடிமக்கள் கதைகளே.
- ❖ குடிமக்கள் கதை ஒன்றும் கேட்டதாக நினைவுக்கு வரவில்லை.
- ❖ குடிமக்களைப்பற்றி எண்ணவதற்கே இடம் இல்லாமல் போய்விட்டது என்று தெ.பொ.மீனாட்சி தாம் இளமை காலத்தில் கேட்ட கதைகள் பற்றி குறிப்பிடுகிறார்.

**2. பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகள் முடிமக்கள் கதைகளே என தெ.பொ.மீ. கூறுவது ஏன்?**

- ❖ பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகள் முடிமக்கள் கதைகளே.
- ❖ வரலாறு என்றால் அரசர்கள் வரலாறு அன்றி வேறொன்றும் வரலாறாக அன்று தோன்றுவதே இல்லை.
- ❖ இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே எப்பொழுதும் பாடமாக வரும்.
- ❖ ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்றால் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும்.
- ❖ எங்களை கதை எழுத சொன்னபோதும், ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான் என்று எழுதத் தொடங்கியதாகவே நினைவிற்கு வருகிறது.
- ❖ முடி மன்னர்களை தவிர குடிமக்களை நினைப்பதற்கு இடமில்லாமல் போனது என தெ.பொ.மீ வருந்துகிறார்.

**3. உலகம் முழுவதும் கதை என்றால் முடிமக்கள் கதையாகத்தான் உள்ளது என்பதை தெ.பொ.மீ எவ்வாறு காட்டியுள்ளார்?**

- ❖ உலகம் தோன்றியதிலிருந்து உலகம் முழுவதும் கதை என்றால் முடிமக்கள் கதைதான்.
- ❖ வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே. அது அரசக்குமார்கள் கதை.
- ❖ கிரேக்க பழங்காப்பியம் எனப்பாராட்டப்படுவது ஹோமர் எழுதிய இலியட்,
- ❖ மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினைப் பாடுவது.
- ❖ இவ்வாறு எந்த நாட்டு பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடி புகழக் காண்கிறோம்.

**4. முடிமக்கள் கதையாய் சிலப்பதிகாரம் இல்லாமல் குடிமக்கள் கதையாகத்தான் இருந்திருக்கிறது என்பதனைத் ஆசிரியர் எங்ஙனம் விளக்கிக் காட்டியுள்ளார்?**

- ❖ குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள்.
- ❖ சிலப்பதிகாரத்தில் சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதை அன்று.
- ❖ பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்விடுகின்றான். ஆனால் அவன் கதையன்று.
- ❖ முரசு முழங்குதானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாய் சிலப்பதிகாரம் விளங்கவில்லை
- ❖ குடிமக்களில் ஒருவன் கதை. அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்!
- ❖ இவ்வாறாக இளங்கோவடிகள் கண்ணகி, கோவலன் என்ற எளிய குடிமக்களை காப்பிய தலைவர்களாக்கி நாடகம் படைத்தமையால் சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே ஆகும்.

**5. பழந்தமிழர் வாய்ப்பந்தல் போடவில்லை என்பதை தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் எவ்வாறு மெய்ப்பிக்கிறார்?**

- ❖ பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது.
- ❖ இப்பழந்தமிழன் வாய்ப்ந்தல் போடுகிறானா? உண்மையைத்தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே! எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரத்தில்,
- ❖ பாண்டியன் நெடுஞ்செழியன் அரசக்கட்டிலில் வீற்றிருக்கிறான். கண்ணகி முன்னே அவன் உயிர் விடுகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று.
- ❖ சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகிறான். கண்ணகிக்கு கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று.
- ❖ கோவலன் குடிமக்களுள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களின் சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரம்.
- ❖ இவ்வாறாக சிலப்பதிகார காப்பியத்தின் எளிய குடிமக்களையும் தலைவன் தலைவியாக்கி தமிழன் வீரத்தை மெய்ப்பித்து காட்டியதால் பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடவில்லை என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் மெய்ப்பிக்கிறார்.

**6. திருவள்ளுவரின் ஒழிபியல் பற்றி ஆசிரியரின் கருத்தை விளக்குக.**

- ❖ திருவள்ளுவர் தனது பொருட்பாலில் குடிகளது சிறப்பினைக் கடைசிப் பதின்மூன்று அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.
- ❖ குடிமக்கள் சிறப்பினை இடைக்காலத்தில் தமிழகம் மறந்ததும் உண்டு.
- ❖ திருக்குறளின் உயிர் நிலையாயுள்ள பொருட்பாலின் முடிமணியாக விளங்குவது ஒழிபியலே ஆகும்.
- ❖ இதை உணராது விட்டது காலத்தின் கோளன்றோ? இன்றே குடிமக்கள் காப்பியத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம்.
- ❖ குடியரசில் அன்றோ வாழ்கிறோம்? பழைய நூல்களைப் புதிய கண்கொண்டு உண்மை உணர இனி வழியேற்படும்.

**கூடுதல் வினா**

**1. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே! - காரணம் தந்து விளக்குக.**

- ❖ **உலகம் முழுவதும் கதை என்றால் முடிமக்கள் கதை தான்:**
  - ➢ வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே. அது அரசக்குமாரர்கள் கதை.
  - ➢ கிரேக்க பழங்காப்பியம் எனப்பாராட்டப்படுவது ஹோமர் எழுதிய இலியட்,
  - ➢ மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினைப்பாடுவது.
  - ➢ இவ்வாறு எந்த நாட்டு பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடி புகழக் காண்கிறோம்.
- ❖ **சிலப்பதிகாரம் முடிமக்கள் கதையாய் இல்லாமல் குடிமக்கள் கதையாய் உள்ளது:**
  - ➢ குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள்.
  - ➢ சிலப்பதிகாரத்தில் சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதை அன்று.
  - ➢ பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்விடுகின்றான். ஆனால் அவன் கதையன்று.
  - ➢ சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகிறான். கண்ணகிக்கு கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று.
  - ➢ இவ்வாறாக கண்ணகி, கோவலன் என்ற எளிய குடிமக்களை காப்பிய தலைவர்களாக்கி நாடகம் படைத்தமையால் சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே ஆகும்.

## 5. ஓய்வு

### புத்தக வினாக்கள்

**1. உழைத்து அலுத்தவனுக்கு ஓய்வு என்பது அடிப்படை நீதி என்பதனை அறிஞர் அண்ணா எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?**

- ❖ காலை முதல் மாலை வரை பாடுபட்ட தொழிலாளிக்கு ஓய்வு அவசியம்.
- ❖ இரவு பிறந்ததும் அயர்ந்து தூங்குகிறான் என்றால் அவனுடைய உடல் அலுப்பு நிச்சயம் குறையும்.
- ❖ ஆனால் உள்ளத்திலே ஏறிவிட்ட சோர்வு நீங்காது.
- ❖ ஓய்வு நேரம் கிடைத்தால் தான் உழைத்து அலுத்தவன் தனது அலுப்பைப் போக்கிக் கொள்ள முடியும். மறுபடியும் பாடுபட முடியும்.
- ❖ ஓய்வு என்பது ஓர் உரிமை. வேலை செய்தவன் தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையில் ஈடுபடுவதற்கான மாமருந்து.
- ❖ ஓய்வு என்பது தூக்கத்தால் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், மனதிற்குப் பிடித்த ஏதாவது ஒரு செயலில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

**2. ஓய்வு நேரம் ஒவ்வொரு நாட்டிலும் எவ்வாறு அமைந்துள்ளது?**

ஓய்வு நேரம் ஒவ்வோர் நாட்டிலும் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொருவிதமாக அமைந்துள்ளது.

- ❖ **ரோம் நாட்டவர்கள் ஓய்வு:**
  - ➢ மற்போர், வாட்போர் செய்து ஆற்றலை காட்டிடும் வீர விளையாட்டுகளைக் காண்பது.
  - ➢ வீரர்கள் மிருகங்களுடன் போரிட்டு அவைகளைக் கொல்வது அல்லது அவைகளால் கொல்லப்படுவது என்ற இரக்கமற்ற விளையாட்டுகளைக் காண்பதனை உல்லாசமளித்திடும் ஓய்வாகக் கருதினர்.
- ❖ **கிரேக்க நாட்டவர்கள் ஓய்வு:**

  ஓய்வு நேரத்தைக் காப்பியம் என்ற தரம் பெற்ற புதிய நாடகங்களைக் காண்பதிலும் கருத்துப் பெறுவதிலும் ஓய்வு நேரத்தை செலவிட்டனர்.

- **ஸ்பெயின் நாட்டவர்கள் ஓய்வு:**
  முரட்டுக் காளையுடன் போரிடுவதிலேயே பெரும்பகுதியைச் செலவிட்டனர்.
- **பழந்தமிழர்களின் ஓய்வு:**
  ஏறுதழுவுதல், மற்போர் போன்ற வீர விளையாட்டிலே நேரத்தை செலவிட்டனர்.
- **இங்கிலாந்து நாட்டவர்கள் ஓய்வு:**
  கோழிச்சண்டை, கரடிச்சண்டை போன்ற போட்டிகளை நடத்தி ஓய்வுநேரத்தில் பொழுது போக்கினர்.

**3. ஓய்வு குறித்து அறிஞர் அண்ணா உரைப்பதனை எழுதுக.**
- வாழ வழி தேடுவதிலேயே காலம் முழுவதும் வலிவு முழுவதும் செலவாகிப் போய்விடுகிறது.
- அதனால் உருக்குலைவு ஏற்பட்டு, மக்கள் தோகை விரித்ததும் செத்துவிடும் மயிலாகின்றனர்.
- அரும்பு அறுந்துபடும் கொடியாகின்றனர். தானும் பயன் காணாமல் பிறருக்குப் பயனளிக்கவும் முடியாமல் வாழ்கின்றனர்.
- மனிதன் வாழ்வதற்கு உழைக்கிறான். பிறருக்கு வாழ்வு அளிக்கவும் உழைக்கிறான்.
- உழைப்பினால் ஏற்பட்டுவிடும் உள்ளத்துத் தேய்வினை தூக்கத்தினால் மட்டும் போக்கிட முடியாது.
- மனத்துக்குத் தெம்பு தரத்தக்க விதமாக அவன் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும்.
- ஓய்வு என்பது இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்குவது மட்டுமல்ல என அண்ணா எடுத்துரைக்கிறார்.

**4. உழைப்பால் ஏற்பட்ட உள்ளத்தேய்வை நீக்கும் முறை குறித்து அண்ணா கூறுவன யாவை?**
- உழைத்த அலுப்பினால் வீடு வந்ததும் படுத்து உறங்கிவிடும் பாட்டாளி விடிந்ததும் மீண்டும் இயந்திரமாகிறான்.
- மனத்திலே தேய்வு வளர்ந்தபடி இருக்கிறது குறைந்திட வழியில்லை.
- உழைத்து அலுத்தவன் உடனடியாக உறக்கத்தை மட்டுமே தேடிக்கொள்ளாமல் நண்பர்களுடன் பேசி மகிழ்வது, குழந்தைகளுடன் விளையாடுவது, பாடுவது, ஆடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால் உடல் அலுப்பு மட்டுமல்ல உள்ளத்திலே மூண்டுவிட்ட அலுப்பும் குறையும்.
- அப்போது அவன் புதிய உற்சாகம் பெறுகின்றான் என அண்ணா கூறுகிறார்.

## 6. சமயங்களின் பொதுநீதி

### புத்தக வினாக்கள்

**1. சமயம் என்னும் சொல்லின் பொருள் ஆழத்தைக் குன்றக்குடி அடிகளார் எவ்வாறு கூறுகிறார்?**
- நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச் செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்கு தகுதியாக்குவது உழவு.
- சுவையுடையனவாக ஆனால் சுவைக்க முடியாதனவாக ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவதே சமைத்தல்.
- மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவபடுத்தும் தத்துவத்திற்கு வாழ்க்கை முறைக்குச் சமயம் என்று பெயர்.
- மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம் என்று குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்.

**2. சமயங்கள் பலவாயினும், அவற்றின் நோக்கம் ஒன்றே என்பதை அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?**
- சமயங்கள் பல பல. சமயங்கள் பலபலவாயினும் அவையனைத்திற்கும் நோக்கம் ஒன்றேயாகும்.
- ஓர் இசையரங்கில் பலர் பல இசைவாத்தியங்களை இயக்கி இசையெழுப்புகின்றனர்.
- ஆயினும் சுருதி, பண், தாளம் மாறுபடாது.
- அதுபோலவே சமயங்கள் மொழியால், கடவுள் பெயரால் மாறுபடலாம். வடிவங்களால் மாறுபடலாம்.
- ஆயினும் மனிதகுலம் ஒன்றே என்ற சுருதியில் மாறுபாடுகள் இல்லை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது சமயநியதி; நீதி
- இவ்வாறு அடிகளார் அவர்கள், சமயங்கள் பலவாயினும், அவற்றின் நோக்கம் ஒன்றே என்பதை விளக்குகிறார்.

**3. எதனை முதற்கடன் எனக் குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார்?**
- உலகத்தில் வாழும் மனிதர்கள் அனைவரும் ஏன் மற்றைய உயிரினங்களும் கூட இறைவனுடைய அன்பிற்குரியவை.
- இந்த உயிரினங்களைப் பேணி பாதுகாப்பதையே இறைவன் தன்னுடைய குறிக்கோளாக கொண்டுள்ளான்.
- உயிரினங்கள் துன்பம் நீங்கி, இன்ப அன்பினில் திளைத்து மகிழ வேண்டும் என்பதே இறைவனின் திருவுள்ளம்.
- ஆனால், உயிர்கள் நிலைத்த இன்பத்தில் மகிழ வேண்டுமாயின் இன்பம் வழங்குதலைவிட, துன்பம் நீக்கம் செய்வதே முதற்கடன் என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார்.

**4. அன்பு என்னும் பண்பின் சிறப்பினை அடிகளார் எவ்வாறு விளக்குகிறார்?**

- ❖ உயிர்க்கு உறுதியினைத் தந்து ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பத்தினைத் தந்து வாழ வைக்கும் குணங்கள் பலபல.
- ❖ அவையனைத்துள்ளும் அன்பு என்ற குணம் மிக மிகச் சிறந்தது.
- ❖ அன்பு துன்ப நோய்க்கு மருந்தாகவும், இன்ப விளைவுக்கு ஊற்றுக் கண்ணாகவும் இருக்கிறது.
- ❖ அது தன்னைக் கொண்டோனையும் மகிழ்விக்கிறது. சார்ந்தோனையும் மகிழ்விக்கிறது.
- ❖ இந்த அன்பினைப் பெற்று வாழ்வாங்கு வாழ வையத்தில் உள்ளோரை வழிநடத்தும் புதுமையைப் பொதுமையை அன்பின் சிறப்பு என்று அடிகளார் விளக்குகிறார்.

**5. ஏசு, பெருமானை அன்பின் திருவுருவமாக அடிகளார் எவ்வாறு காட்டுகிறார்?**

- ❖ உலகின் பாவத்தை தமது செந்நீரால் கழுவிய இயேசு பெருமான் அன்பின் திருவுருவம்.
- ❖ அவரருளிய மலைச்சொற்பொழிவு அன்புப்பொழிவு.
- ❖ ஒருவரையொருவர் அன்பு கொண்டு ஒழுகுங்கள். பகைமை பாராட்டாதீர்கள்.
- ❖ மன்னிக்கும் குணத்தினைப் பெறுங்கள். எல்லோருக்கும் எப்போதும் அன்பு காட்டுங்கள் என்று வையகத்தை வழி நடத்தினார்.
- ❖ கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் மீது கருணை பொழியப்படும் என்ற விவிலிய அறிவுரை எண்ணத்தக்கது.

**6. இஸ்லாமிய மதத்தின் இணையற்ற கொள்கை என்று குன்றக்குடி அடிகளார் சுட்டுவது யாது?**

- ❖ கடவுள் படைப்பிலுள்ள மக்கள் அனைவரையும் தம் பிள்ளைகளைப்போல் கருதி அனைவர் இன்ப துன்பங்களையும் ஒருவன் எப்பொழுது தனதாகக் கருதுகிறானோ அப்பொழுதே அவன் ஸீபி ஆவான் என்பது அருள் வாக்கு.
- ❖ மாந்தர் குலம் ஒன்றே என்பதும் அவர்கள் அனைவரும் ஒருகுலமாக வாழக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதுமே புனித குர்-ஆனின் உபதேசம்.
- ❖ அல்லா மிகுந்த தயையுள்ளவர். கருணைக்கடல். கிருபா சமுத்திரம், பரம தயாளு என்பது புனித குர்-ஆனின் வாசகம்.
- ❖ உலகத்து உயிர்களுக்கு யாரால் அதிக இன்பம் கிடைக்கிறதோ அவர்களையே அவர் அதிகமாக நேசிக்கிறார் என்பது இஸ்லாமிய மதத்தின் இணையற்ற கொள்கை.

**7. அன்பு பற்றிப் புத்தபிரான் கூறுவன யாவை?**

- ❖ இந்திய மண்ணில் தோன்றிய சமயங்கள் சில. அவற்றுள் புத்த சமயமும் ஒன்று.
- ❖ சித்தார்த்தரை புத்தராக்கியதே அன்பு தான்.
- ❖ புத்தர் அன்பின் வடிவமாகவே வாழ்ந்தார். அவர் மனித குலம் உய்யும் நெறியாக காட்டுவது அன்பு நெறி
- ❖ தாய் தன் உயிருக்கு ஆபத்து வருவதையும் கருதாது தன் ஒரே பிள்ளையைப் பாதுகாப்பது போல மனிதன் எல்லா உயிர்களிடமும் எல்லையற்ற அன்பு கொண்டிருக்க வேண்டும்.
- ❖ அகில உலகினிடமும் எல்லையற்ற அன்பு கொண்டு வாழ வேண்டும் என்றும் புத்த சமய வேதமாகிய பீடகம் பெருமையுடன் கூறுகிறது.

**8. சமணம் எடுத்துரைக்கும் நெறியாது?**

- ❖ இந்தியச் சமயங்களுள் சமண சமயமும் ஒன்று.
- ❖ சமண சமயத்தின் புராணங்கள் ‘தயையே தர்மத்தின் வேர்’ என்று வற்புறுத்துகின்றன.
- ❖ ஜினேந்திர தேவன் தர்மத்தின் இறுதி எல்லையாயிருப்பது கருணை என்று கூறுகிறார்.
- ❖ கருணையில்லாத மனிதனிடம் தர்மம் இம்மியளவும் இராது என்று சமணம் எடுத்துரைக்கிறது.
- ❖ மகாவீரர் பகைவனோ நண்பனோ விரோதியோ எல்லா உயிர்களையும் எல்லா மனிதர்களையும் ஒன்றுபோல் மதித்து எல்லோரையும் தாமாகக் கருதுதலே அகிம்சை என்று அருளிச் செய்துள்ளார்.

**9. அப்பரடிகள் விழுமிய கருத்தாக அடிகளார் கூறுவன யாவை?**

- ❖ “சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு” எனத் திகழ்பவர் அப்பரடிகள்.
- ❖ அவர், ஈசன் எங்கும் இருக்கிறான் எனக் கருதினார்.
- ❖ எல்லாரிடத்தும் அன்பு கொள்ளாதவர், சமயச் சடங்குகளாய்க் கருதப்படும் கங்கை, காவிரி முதலிய புண்ணிய ஆறுகளில் மூழ்குதலில் பயன்பெற முடியாது என்கிறார்.
- ❖ நெஞ்சில் ஓடும் வஞ்சனை ஆறு வற்றினாலே திருஅருட்புனல் பொங்கி வழியும் என்பது அப்பரடிகளின் விழுமிய கருத்தாகும்.

10. **"சமயங்களின் ஒருமித்த குரல்" என, குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?**
- ❖ உலகில் நிலவும் எல்லா சமயங்களும் மனித குலத்தை இன்ப அன்பு கலந்த அணைப்பில் ஒரு குலமாக்க முயலுகின்றன.
- ❖ மனித குலம் ஒன்று என்பதே பொது நீதி, இடையில் நிலவும் வேறுபாடுகள், வேடிக்கை மனிதரின் விளையாட்டு அமைப்புகளே ஆகும்.
- ❖ சமயங்களின் ஒருமித்த குரல் அன்பு காட்டு, உதவி செய், பகையை மற, பண்பு பாராட்டு, அன்புப் புனலால் தனது மாற்றார் மனம் ஆகியவைகளைக் குளிப்பாட்டு.
- ❖ உயிர் வர்க்கத்தின் மகிழ்ச்சிப் புனலால் எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களைக் குளிப்பாட்டுங்கள் என்பதேயாகும்.

## 7. கல்வெட்டுகள்

### புத்தக வினாக்கள்

1. **சிலாசாசனங்கள் எனப்படுவன யாவை?**
- ❖ கோயில்களின் உள்ளே சென்று கருவறையில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, அதனை சூழ்ந்துள்ள பிரகாரத்தை சுற்றி வரும் போது கருங்கற் சுவர்களின் மேல் வரிசை வரிசையாக எழுத்துகள் வரையப்பட்டிருக்கும்.
- ❖ அவ்வெழுத்துகள் சிற்றுளி கொண்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டனவாகும்.
- ❖ அவை கல்வெட்டுகள் எனவும் "சிலாசாசனங்கள்" எனவும் அழைக்கப்படும்.
- ❖ பழங்காலத்தில் அந்த எழுத்துகள் புரியாததனால் தேவர்கள் தம் தெய்வ மொழியில் வரைந்து வைத்திருத்தல் வேண்டும் எனக்கூறி வந்தனர்.

2. **கல்வெட்டுத்துறையால் தமிழர்க்குக் கிடைத்த நலங்கள் யாவை?**
- ❖ கல்வெட்டுகள் நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப்பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்தியவர்கள் மேல்நாட்டு பேரறிஞர்களே ஆவார்.
- ❖ அவர்களுள் இராபர்ட் சிவெல், டாக்டர். கீலஹார்ன், டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் ஷீல்ட்ஷ் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.
- ❖ இவர்கள் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளைப் படி எடுப்பித்தும், புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும் அவற்றால் அறியக்கிடைக்கும் பழைய வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடுமாறும் செய்தனர்.
- ❖ அவற்றின் பயனாக பல நூற்றாண்டுகளாக நாம் அறிந்துகொள்ள முடியாத நிலையில் மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு சிறிதுசிறிதாக வெளிவரத் தொடங்கியது.
- ❖ நமது பழைய வரலாற்றை நாம் அறிந்துகொள்ளுமாறு அரசாங்கத்தினர் கல்வெட்டு இலாகா மூலம் செய்துவந்த அருஞ்செயல்கள் நம்மவர்களால் பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

3. **நடுகல் என்பது யாது? அதன் பயன் குறித்து எழுதுக.**
- ❖ போர்க்களத்தில் பகைவர் முன்னின்று ஆற்றலோடு அவரை எதிர்த்து வீரமரணம் அடைந்த வீரர்களை பற்றி நினைவுகூற எழுந்தவை – நடுகற்கள்
- ❖ அவ்வீரர்கள் வீரமரணம் அடைந்த இடங்களிலோ வேறு தொடர்புடைய இடங்களிலோ நடுகல் அமைத்து விழா நடத்தி பாராட்டுவர்.
- ❖ நடுகல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் வரையப்படும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்தது என்பது கடைச்சங்க புலவர்களின் பாடல்களால் புலப்படுகிறது.
- ❖ சிறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய பெயரும் பீடுமே நம் நாட்டில் தோன்றிய தமிழ்க்கல்வெட்டுகள் ஆகும்.

4. **கல்வெட்டு வளர்ச்சிக்கு சமண முனிவர்கள் எவ்வகையில் காரணமாயினர்?**
- ❖ தமிழ்நாட்டில் சமண முனிவர்கள் தங்கி ஆங்காங்கு சங்கங்கள் அமைத்துத் தம் சமயத்தை ஆண்டும் பரப்பியும் வந்தது பலரும் அறிந்ததே.
- ❖ சமண முனிவர்கள் உண்ணா நோன்பியற்றி உயிர்நீத்த இடங்களில் அவர்களின் மேல் அன்பு கொண்டவர்கள் இறந்தவர்களின் பெயர்களையும் அருஞ்செயல்களையும் பொறித்துவைத்திருந்தனர்.
- ❖ சமணமுனிவர்களின் பெயர்களும் அருஞ்செயல்களும் சமாதிகளிலும் கருங்கற்படுக்கைகளிலும் பொறிக்கப்பட்டது.
- ❖ இவ்வாறாக கல்வெட்டு வளர்ச்சிக்கு சமண முனிவர்கள் அடிப்படை காரணமாயிருந்தனர்.
- ❖ அத்தகைய கல்வெட்டுகளை செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்று, திருநெல்வேலியில் உள்ள ஆனைமலை மற்றும் திருச்சிராப்பள்ளிக் குன்றுகளில் காணலாம்.

**5. கல்வெட்டுகளின் பொதுவான இயல்புகளை விளக்கி எழுதுக.**

1. **மங்கலச்சொல்**
   - ஸ்வஸ்திஸ்ரீ எனும் நலம் வளர்க பொருளுடன் தொடங்கும்.
2. **ஆட்சியாண்டு**
   - கல்வெட்டு தோன்றிய காலம், அரசரது ஆட்சியாண்டும் குறிக்கப்படும்.
3. **மெய்க்கீர்த்தி:**
   - இது இராசராசனால் தொடங்கப்பட்டது.
   - இதனில் வீர தீர செயல், சிறப்புப்பெயர், இயற்பெயர் பொறிக்கப்படும்.
4. **ஓம்படைக்கிளவி:**
   - கல்வெட்டுச் செய்திகளுக்குப்பின் தொடர்புடையவர்களின் கையொப்பம் ஆகியன இடம்பெற்றிருக்கும்.

**6. மெய்க்கீர்த்தி குறிப்பு வரைக.**

- மெய்க்கீர்த்தி முதல் இராசராசசோழனால் கி.பி 893-ம் ஆண்டு முதலில் தொடங்கப்பட்டது.
- மெய்க்கீர்த்தி என்பது காலக்குறிப்புகள், ஆட்சியாண்டு வரும் முறை, வீரச்செயல், சிறப்புப்பெயர்கள் போன்றவைகளைக் கல்வெட்டுகள் அமைத்து வரையும் முறையே ஆகும்.
- அரசனுடைய ஆட்சியாண்டு ஏற ஏற மெய்க்கீர்த்தியும் புதியப் புதிய செய்திகளோடு வளர்ந்து கொண்டே போகும்.
- மெய்க்கீர்த்தியின் துணைகொண்டு ஒவ்வொரு வேந்தருடைய ஆட்சியிலும் எந்த ஆண்டில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை அறிந்து கொள்ளலாம்.
- ஆகவே மெய்க்கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுகள் எல்லாம் வரலாற்று ஆராய்ச்சிக்கு சிறந்த ஆதாரங்களாக இருத்தல் உணற்பாலதாகும்.

## 8. தமிழக மகளிர்

## புத்தக வினாக்கள்

**1. மனைக்கு விளக்காகிய மகளிர்வீட்டு வாழ்க்கை சிறக்க ஆற்றும் பணிகள் யாவை?**

- மனைக்கு விளக்குப் போல விளங்குபவர்கள் மகளிர்.
- உயிரென விளங்கிய தம் கணவரைப் பேணி வருகின்றனர்.
- பெண்ணின் பெருமையாய்த் தம் திண்ணிய கற்பினைக் காத்தும் வருகின்றனர்.
- மயக்குறும் மக்களை மாண்புற வளர்த்து வருகின்றனர்.
- வருந்தி வரும் உறவினரை ஓம்பி காக்கின்றனர்.
- இடும்பையெனக் கருதாது குடும்பச் சுற்றத்தைத் தழுவியும் கடவுளை வணங்கியும் வாழ்வு நடத்துகின்றனர்.

**2. கணவன் மனைவி இருவருக்கும் இடையே இருந்த உறவின் மேன்மையை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?**

- கணவன் மனைவியென்ற இருவரின் தொடர்பைத் திருவள்ளுவர்,

  **"உடம்பொ டுயிரிடை யன்ன மற்றன்ன**
  **மடந்தையொ டெம்மிடை நட்பு"** என விளக்குகிறார்.
- செல்வம் கொழிக்கும் அரசியின் வாழ்வும் கணவனிறக்க வறண்டு விடுவதைக் காணலாம்.
- அலுத்த வந்த ஆருயிர் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது குடும்பத்தலைவியின் முதற்கடமையாகும்.
- தான் சமைத்ததை இனிது! இனிது! எனக் கணவன் சுவைத்து உண்பதைக் கண்டு மனைவி மனம் மகிழ்வாள்.
- இத்தகை உண்மையன்பினாலேயே வன்மை மிக்க ஆடவரையும் மென்மை மிக்க மகளிர் பிணித்துவிட்டனர்.

**3. பண்டைத்தமிழகத்தின் வறுமைக்காட்சியும் வளமார்க் குடும்பக்காட்சியும் சங்க இலக்கியத்தில் எவ்வாறு சித்திரிக்கப்பெற்றுள்ளன?**

- **பண்டைத்தமிழகத்தின் வறுமைக்காட்சி:** வறுமையில் வாடிய பெருஞ்சித்திரனார் மனைவி மருங்கிற் கொண்ட பல்குறுமாக்களை உடையவளாய் காட்டப்படுகிறாள்.
- அம்மடந்தை உணவின்மை காரணமாக தன் குழந்தைக்கு இயற்கை உணவாகிய பால் கொடுக்க இயலாது போகவே,

- செயற்கை உணவாகிய சோற்றினை நாடிச்சென்ற அக்குழந்தை உள்ளே வெற்றுக் கலனேயிருக்க கண்டு பசியால் அழுகிறது.
- எனவே குழந்தையின் அழுகையை நிறுத்த தாய் மறப்புலி கூறி பயமுறுத்துகிறாள்.
- **பண்டைத்தமிழகத்தின் வளமார் குடும்ப காட்சி**: இதற்கு முற்றிலும் மாறாக மற்றொரு காட்சியும் உண்டு.
- பெற்ற தாய் ஒரு புறமிருக்க, வளர்ப்புத்தாய் தேன் கலந்த பால்சோற்றினை பொற்கிண்ணத்தில் வைத்து சிறுகோலோச்சி அச்சுறுத்துவதால் பசியில்லா அக்குழந்தை உண்ண மறுத்து தோட்டப்பந்தலின் முன்னும் பின்னும் ஓடியாடும்.

**4. தமிழக மகளிர் சிறந்த கலைஞர்களாய் விளங்கினர் என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.**

- இல்லறக் கடமைகளோடு மகளிர் கலை பல கற்றுமிருந்தனர்.
- கலையுணர்ச்சி பொருந்த தம்மை ஒப்பனை செய்து கொள்வர்.
- தம் சிறுவர் சிறுமியர்க்கும் கற்பனை நிறைந்த ஒப்பனை செய்து மகிழ்வர்.
- ஓவியம் தீட்டல், காவியம் புனைதல், ஆடல், பாடல் ஆகிய கலைத்துறைகளிலும் மகளிர் சிறந்து விளங்கினர்.
- மாதவியின் ஆடல், பாடல் திறன் கலைத்திறனுக்கோர் மலைச்சிகரம்.
- குடிசைத்தொழில்கள் எனப் பேசப்படும் நூல் நூற்பு, ஓலை வேலை முதலியனவும் நடைபெற்றன என்பதை பருத்திப் பெண்டிர், இரும்பனங்குடை என்னும் சொற்றொடர்கள் விளக்கும்.
- தாய்மார் வீட்டுப்பொருள்கள், தோட்டப்பொருள்களான தென்னை, பனை முதலியவற்றின் இளங்காய்கள் கொண்டு சிறுதேர் முதலியன சிறார்க்குச் செய்து கொடுத்தனர்.

**5. இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வை நடத்தினர் தமிழக மகளிர் என்ற கருத்தை விளக்குக.**

- பண்டைக்காலத்து தமிழக மகளிர் இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வு நடத்தினர்.
- சிறுமியர் சிறுவரோடு ஆற்றோரங்களிலும் குளக்கரைகளிலும் நீராடியும் நிழலிலிருந்தும் ஆரவாரம் செய்து விளையாடினர்.
- சிறுவர் குளக்கரைகளிலுள்ள உயர்ந்த மரத்தின் உச்சியில் ஏறி வீழ்ந்து குளத்தின் அடி வரையிற் பாய்ந்து அடி மண்கொண்டு கரைசேர்ந்து வெற்றி கொண்டாடி மகிழ்வர்.
- இளம்பருவத்திலேயே ஆடவர் வெற்றிக்காண ஊக்கமூட்டியவர்கள் மகளிரே ஆவர்.
- பருவ மகளிர் காற்றோட்டமுள்ள பரண்மீதிருந்து பயிர் காத்தனர்.
- ஆடவரும் மகளிரும் முழுமதி நன்னாட்களிலும் மாலைநேரத்திலும் குரவை கூத்தாடினர்.
- இதன் வாயிலாக பண்டைய தமிழக மகளிர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் என்பது புலப்படுகிறது.

**6. அறிவும் ஆற்றலும் அஞ்சாமையும் பெண்பாலரிடம் மிக்கிருந்தன என்பதற்கு எடுத்துக்காட்டான நிகழ்வுகள் யாவை?**

- **மூதின் முல்லை இலக்கணச் செய்யுள் கூறுவது:**
  - ஆடவரைப்போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதையே,
  - **“அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்**
    **மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று”** என்று மூதின் முல்லை குறிக்கும்.
- **புறநானூறு குறிப்பிடுவது:**
  - கணவனும் தமையனும் களத்தில் இறக்க, மைந்தனை போர்க்கோலம் புனைவித்துப் போருக்கு அனுப்பிய தாயின் வீரமும்,
  - நரை மூதாட்டி தன் முதுமைப்பருவத்து அருமையாய் பெற்ற ஒரு தனி மகனும் போரிலிறக்க வருந்தாது, ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரமும் இப்பாடல்களிற் பொலிந்து தோன்றும்.
- **குறுந்தொகை பாடல் குறிப்பிடுவது:**
  - வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொலியும் மகளிர் மனைவியராய் வாய்ப்பதையே பெரும் பேறாகக் கருதினர் என்னும் கருத்து குறுந்தொகை பாடலில் கூறப்பட்டுள்ளது.
- நாடு விட்டு நாடு சென்று நயம்பட தூதுரைத்தார் ஔவை மூதாட்டியார்.
- வழக்கறிஞர் துணை நாடாது, மன்னனது மாபெரும் மன்றத்திலும் வழக்கை தானாகவே திறம்படக் கூறிய கண்ணகியின் சொல்வன்மை போற்றுதற்குரியது.

**கூடுதல் வினா**

**1. பண்டைய தமிழக மகளிரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.**

- வீடு தேடி வரும் விருந்தினர்க்கு வயிறார உணவளித்து, உடலாற உறைவிடங்கொடுத்து உள்ளங்குளிர புன்முறுவல் பூத்த இனியவை கூறி விருந்தளிப்பதே பண்டைய தமிழக மகளிரின் முதற்கடமை.
- விருந்தோம்பலே இல்லறத்தாரின் இன்றியமையா கடமையாய் விளங்கியது.
- வறுமையில் வாடியவருங்கூட குப்பைக்கீரை கொய்து உப்பில்லாமல் அட்டேனும் விருந்தோம்பினர் எனப் பழம்பாடல் கூறும்.
- இல்வாழ்வாளின் இனிமையான கடமைகளுக்குள்ளே விருந்தோம்பல் மிகவும் சிறப்பானது ஆகும்.
- ஒல்காப்புகழ் தொல்காப்பியனாரும் விருந்தோம்பலைத் தலைவன் தலைவியர்க்குள்ளே ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாக குறித்தார்.

**தயாரிப்பு**
**திரு. த. செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி**

**தயாரிப்பில் உதவி**
**திருமதி. நா. தேவிகா சுரேஷ் MA., B.Ed., P.G.D.C.A.,**
**வெற்றிக்கு வழி ஆசிரியர் குழு**